**தலைப்பு 182 - வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 182 - வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் ஏற்பாடுகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அந்த ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | செயல்நடவடிக்கை திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிராமை. | 2.1.1 |
| | | 2. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்பட்டிராமை. | 2.2.1 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று உருவாக்கப்படல் வேண்டும். | 1. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| | | 2. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.7 |
| | | 3. | தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள் | 2.6 |
| | | 4. | மனித வள முகாமைத்துவத்திலான பலவீனங்கள் | 2.16 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான | 1. | பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை | 2.1.2 |
| | | 2. | வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயற்றிறன் நிறைவேற்றப்படாமை | 2.1.3 |
| | | 3. | பெறுகை நடைமுறையை | 2.2.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்தல். | | அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | | ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.8 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.9 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், | 1. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.5 |
| | | 2. | நிதியுடன் தொடர்பு படுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்ளப்படாமை | 2.11 |

நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

அமைச்சினால் அதன் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு இயலக்கூடிய வகையில் நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராததுடன், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான செயலாற்றல் குறிகாட்டியின் (KPI’s) குறுங்கால அடைவுகளை அடைந்து கொள்வதிலான விளைதிறனை அளப்பதற்கு பொருத்தமற்றதென அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, அமைச்சு அதன் தூர நோக்கினை செயற்படுத்தும் போது நிலவும் திட்டமிடல் நடைமுறை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய செயற்பொறுப்பொன்று நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 2.1.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் முன்னணி துறையொன்றாக (Thrust Area) வெளிநாட்டு சந்தைகளின் மேம்படுத்தல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது தொழில்வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 242,930 ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் போது அந்த எண்ணிக்கை 212,162 வரை அல்லது 12.67 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பில் அமைச்சினால் பல்வேறு நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்ட 20 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் 2017 ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. 12 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள்

**(I) அந்த உடன்படிக்கையை காலத்திற்கு காலம் நாளதுவரையாக்குவதற்காக மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

(i) ஜோர்தானுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையை மீண்டும் மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு 2016 யூலை 12 ஆந் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக ஜோர்தானுக்கான இலங்கை தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பஹ்ரெயின் அரசுடனான உடன்படிக்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக பஹ்ரெயினுக்கான இலங்கை தூதரகத்திற்கு மீள் பரிசோதனைக்காக 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதி கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பில் பதிலொன்று கிடைத்திருக்கவில்லை.

**(II) உடன்படிக்கை கைச்சாத்திட்ட நாடுகளுடன் ஒருங்கிணைந்த குழுக்கூட்டங்கள் உரிய முறையில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.**

(i) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 12 நாடுகளில் கட்டார், ஓமான் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுடன் 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஒருங்கிணைந்த குழுக் கூட்டங்கள் முறையே 4, 3 மற்றும் 2 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. ஏனைய உடன்படிக்கைகளுக்கு உரியதாக ஒருங்கிணைந்த குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டடைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம், பஹ்ரெயின் மற்றும் குவைத் அரசாங்கங்களுடன் வருடாந்த ஒருங்கிணைந்த குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2009 ஆம் ஆண்டு முதல் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

இலங்கை அரசு மற்றும் சுவிஸ்லாந்து அரசு ஆகியவை ஒருங்கிணைந்ததாக இலங்கையிலிருந்து வெளிநாடு சென்ற ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின்

பாதுகாப்பிற்காகவும் அபிவிருத்திக்காகவும் பங்களிக்கும் நோக்கத்துடன் ''சிறந்த தொழில்வாய்ப்புக்களுக்காக வெளிநாடு சென்ற ஊழியர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களின் குடும்பங்களுக்கான பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு'' எனும் பெயருடைய நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக சுவிஸ்லாந்து அரசு 3,875,000 ஐ.அ.டொலர்களை உதவு தொகையான வழங்குவதற்கு இணங்கியிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் தகவல்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இதற்குரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக நிதி உதவிகள் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய விதிகளில் ஒன்றினை புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்குமாறு வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்தல் மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளரால் சுவிஸ்லாந்து அரசினை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறானதொரு விதியொன்று உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அமைச்சின் செலவினத் தலைப்பினூடாக இந்த நிதி பெறப்பட்டிருக்காததுடன், செயற்திட்டத்தின் கணக்காய்வு தொடர்பான தகவல்களும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டக் காலம் 2016 பெப்ரவரி 28 ஆந் திகதி நிறைவடைய வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் செயற்திட்டத்திற்குரிய அந்த காலமானது 2020 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், புதிய செயற்திட்டத்திற்குரிய தகவல்கள் உள்ளடங்கிய பிரதான திட்டமானது கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. முதல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் செயற்திட்டத்தின் விடய பரப்பு, காலப்பகுப்பாய்வு, கிரய வகைப்படுத்தல், மனிதவளம், மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை திட்டமிடல், பொறுப்பினை கையளித்தல், தொடர்பாடல் திட்டம் அறிக்கையிடல் போன்ற பிரதான கூறுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்படி செயற்திட்டத்திற்குரியதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அமைச்சின் செயற்பொறுப்பினை நிறைவேற்றும் போது கவனம் செலுத்த வேண்டிய பிரதான துறைகள் (Thrust Areas), அடைவு (Output), பிரதிபலன் (Outcome) மற்றும் அதற்கமைய இனங்காணப்படுகின்ற பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றத்தினை பரிசீலிப்பதற்கு தேவையான பணிகள் கணக்காய்விற்காக கோரப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயற்பாடு தொடர்பான அவதானிப்புக்கள் அறிக்கையிடப்பட முடியாதிருந்தது.

**2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்**

**2.2.1 பெறுகையினை திட்டமிடல்**

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 128.26 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 123.85 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்த மொத்த நிதியேற்பாட்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று

தயாரிப்பதற்கு பதிலாக ரூபா 76.4 மில்லியன் நிதியேற்பாட்டிற்காக மாத்திரம் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 பெறுகை நடைமுறையினை அமுல்படுத்தல்

புலம்பெயர்ந்த பணியாளர்கள் தொடர்பான குடும்ப கட்டமைப்பினை நிர்மாணித்தல் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய தகவல்களை கணனிமயப்படுத்தும் நோக்குடன் 329 பிரதேச செயலகங்களுக்கு கணனி தொகுதிகள் ஒன்று வீதம் வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் முதற் கட்டமாக 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் முறையே 242 கணனிகள் மற்றும் 35 கணனிகள் எனுமாறு 277 கணனிகள் ரூபா 35,500,959 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு திகதியான 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் எஞ்சிய 52 பிரதேச செயலகங்களுக்காக கணனி மற்றும் ஏனைய உபபாகங்களை கொள்வனவு செய்யமுடியாதிருந்ததுடன், கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் பயன்படு ஆயுட்காலம் கடந்து செல்கின்றமை மற்றும் கணனிகள் தொழில்நுட்ப ரீதியாக காலாவதியாதல் தொடர்பான அச்சுறுத்தல் நிலவியது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

#### (அ) நிதி மற்றும் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழான வாகனங்களின் பயன்பாடு

அமைச்சினால் நிதிக் குத்தகை முறைமையின் அடிப்படையில் 05 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு, அதற்காக குத்தகை தவணைகள், எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக (சாரதி சம்பளப் படிகள் நீங்கலாக) ரூபா 8,064,350 செலவிடப்பட்டிருந்தது. அந்த வாகனங்கள் 2017 ஆம் ஆண்டினுள் 54,757 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ஒரு கிலோமீட்டர் பிரயாணத்திற்காக ரூபா 147.29 செலவிடப்பட்டிருந்தது.

#### (ஆ) கிரயம் மற்றும் செயற்திறனின்றி சொத்துக்களை கைத்தவிர்ப்பு செய்தல்

2012 ஆம் ஆண்டின் போது அரச மதிப்பீட்டாளரால் ரூபா 2.8 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த அமைச்சிற்குரிய வாகனமொன்றை கைதவிர்ப்பு செய்வதற்காக அந்த வருடத்திலேயே அரச நிதி திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு வரையிலும் அந்த வாகனம் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி உள்ளகக் குழுவொன்றினால் ரூபா 400,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு, விலைக்கேள்வி கோரப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது அது ரூபா 1,274,900 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், வாகனத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு உத்தியோகத்தர்கள் தவறியமையால், கொள்வனவாளருக்கு பணத்தை மீள செலுத்த நேர்ந்திருந்தது. அரசாங்கத்தின் கைதவிர்ப்பு நடைமுறை முறையற்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கான பத்திரிகை அறிவித்தலுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 170,526 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் 05 டபள் கெப்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டின் 10 மாதங்களுக்கான வாடகையாக ரூபா 7,956,850 தொகை செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 மார்ச் 17 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்திக்கமைய வாகனத் தேவைப்பாடு மீளாய்வு செய்யப்பட்ட குழுவின் தலைமைத்துவம் அமைச்சின் செயலாளரால் வகிக்கப்பட்டிருந்தது.
மேலும், அந்த குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு முன்னர், அதாவது 2016 ஏப்ரல் 19 ஆந் திகதி திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ii) மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கமைய அரச பெறுகைகள் நடைமுறைக்கமைய போட்டி அடிப்படையிலான கூறுவிலைகளை கோருதல் மூலம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், பெறுகை நடைமுறையில் பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.

- பெறுகை வழிகாட்டிக் கையேட்டின் 3.4(இ) iii ஆம் பந்திக்கு முரணாக கூறுவிலைகளை கோரும் போது முதலாவது மற்றும் இரண்டாம் சந்தர்ப்பங்களின் போது பதிலளிக்காத 09 வழங்குனர்களிடமிருந்து மூன்றாவது சந்தர்ப்பத்திலும் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன், அவர்களிடமிருந்து அவற்றிற்கும் பதில் கிடைத்திருக்கவில்லை.

  மேலும், முதலாவது இரண்டாவது முறை கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்த வழங்குநர்கள் மூன்றாவது தடவை கூறுவிலை கோரும்போது கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.2 ஆம் இலக்க பந்திக்கமைய தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும், விலைக் கேள்வி நிரப்புவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த திகதிக்கு நான்கு நாட்களுக்கு பின்னர் அனுப்பப்பட்டிருந்த விலைக்கேள்வியொன்று விலைக்கேள்விகளை மதிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட்டு, அந்த விலைக்கேள்வியை சமர்ப்பித்த நிறுவனத்தை வழங்குநராக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 2016 திசெம்பர் 19 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 01/2016(i) ஆம் இலக்கத்திற்கமைய அமைச்சின் பதவியணிக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக பெறுமதி சேர் வரி நீங்கலாக மாதாந்தம் ரூபா 135,000 ஆகக்கூடிய வாடகையாக இருக்க வேண்டியதுடன் மேற்படி வாகனத்திற்காக ரூபா 165,000 தொகையான மாதாந்த வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

---

மீளாய்வாண்டினுள் 2 வாகனங்கள் விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், அந்த வாகனங்களில் காப்பீடு செய்யப்படாத ரூபா 289,626 கூட்டுத்தொகையான நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அந்த நட்டத்தினை மேவுகை செய்வதற்கும் அதற்குரிய தகவல்களை நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டிலும் ஒதுக்கீட்டுக் கணக்கிலும் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

2016 நவம்பர் 09 ஆந் திகதிய அ.ம.ப.16/2048/741/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரசின் துரித நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமானது 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.7 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச செயலகங்களில் இணைப்பு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் புலம்பெயர்ந்தோருக்கான குடும்ப பின்புல அறிக்கைகளை பரிந்துரை செய்யும் போது மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் சாட்டப்படும் குற்றங்களுக்குரிய ஒழுக்காற்று பரிசோதனைகள் மந்தமான நிலையில் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 17 உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு 01 முதல் 05 வருடங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருந்த 09 வாகன விபத்துக்கள் தொடர்பில் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் PFD/PED/2015/08/பொது(i) ஆம் இலக்க மற்றும் நிதிப்பிரமாணம் 104(1), (3), (4) மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 199 | 197 | 2 | 1 |
| | மூலதனம் | 225 | 205 | 20 | 8.88 |
| | **மொத்தம்** | **424** | **402** | **22** | **5.18** |
| **2014** | மீண்டுவருபவை | 469 | 455 | 14 | 2.98 |
| | மூலதனம் | 204 | 187 | 17 | 8.33 |
| | **மொத்தம்** | **673** | **642** | **31** | **4.6** |
| **2015** | மீண்டுவருபவை | 612 | 538 | 74 | 12.09 |
| | மூலதனம் | 533 | 425 | 108 | 20.26 |
| | **மொத்தம்** | **1145** | **963** | **182** | **15.88** |
| **2016** | மீண்டுவருபவை | 619 | 593 | 26 | 4.2 |
| | மூலதனம் | 524 | 476 | 48 | 9.16 |
| | **மொத்தம்** | **1143** | **1069** | **74** | **6.47** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2017** | மீண்டுவருபவை | 624 | 606 | 18 | 2.88 |
| | மூலதனம் | 129 | 120 | 9 | 6.97 |
| | **மொத்தம்** | **253** | **727** | **27** | **10.67** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பாதீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல்**

அமைச்சிற்குரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

(i) அமைச்சின் கட்டிடத்தினை மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும் நோக்குடன் 02 மூலதன விடயங்களின் கீழ் ரூபா 2,200,000 கூட்டுத்தொகையும், 03 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் ரூபா 6,250,000 கூட்டுத்தொகையுமாக ரூபா 8,450,000 கூட்டுத்தொகையான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அலுவலக கட்டிடத்தினை நிர்மாணித்தல் தொடர்பான காலங்கள் நிர்ணயிக்கப்பட்டமையால், மூலதன செலவின விடயங்களின் கீழான மொத்த நிதியேற்பாடு மற்றும் மீண்டெழும் செலவின விடயத்தின் கீழான நிதியேற்பாடு ஆகியவற்றிலிருந்து ரூபா 5,309,002 அல்லது மொத்த நிதியேற்பாட்டின் 85 சதவீதம் எஞ்சியிருந்தது.

(ii) மூலதன சொத்துக்களை மீளமைத்தலின் கீழ் இயந்திரம் மற்றும் உபகரணங்களுக்காக ரூபா 2,200,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) 02 செலவின விடயங்களுக்காக ரூபா 11,660,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு முரணாக ரூபா 11,775,200 தொகை செலவிடப்பட்டமையால், ஒதுக்கப்பட்ட நிதியை விஞ்சி ரூபா 115,200 செலவிடப்பட்டிருந்தது.

### 2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 18201 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 35.00 | 31.14 | 10.00 | 14.11 | 80.00 | 48.86 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாக இருந்த ரூபா 353,626 தொகையான கடன் மீதிகள் 01 முதல் 04 வருடங்கள் வரையான காலவீச்சில் முன்கொண்டு வரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்**

அமைச்சினால் தமது கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 493 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, நபருக்கான செலவினம் ரூபா 472,178 ஆகக் காணப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 12 | 09 | 03 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 02 | 02 | - |
| (iii) | மூன்றாம் மட்டம் | 1218 | 1008 | 210 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 27 | 23 | 02 |
| | **மொத்தம்** | **1259** | **1044** | **215** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிரதேச மட்டத்திலான புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றோர் தொடர்பாக தகவல் சேகரித்தல், கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்என் இறுதியளவில் அந்த பதவியணியில் 215 வெற்றிடங்கள் நிலவிய போதும், 06 மாவட்டங்களில் பிரதேச செயலகங்களின் 09 உத்தியோகத்தர்களின் மிகையொன்று நிலவியது. அதனிடையே ஊவா, வடமத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கூடுதலான வெற்றிடங்கள் நிலவுகின்றமை.

(ii) மீளாய்வாண்டின் போது அமைச்சின் பதவியணியில் 1044 பேர் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 5,000,000 தொகையான வருடாந்த நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அமைச்சினால் அனைத்து உத்தியோகத்தர்களும் உள்ளடங்கும் வகையில் பயிற்சித்

திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன், பதவியணியின் 52 பேருக்காக ஆண்டினுள் எந்தவொரு பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்படி ஒதுக்கீட்டுப் பணத்தில் ரூபா 497,426 தொகை பயிற்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.11 அரச ஊழியர்களுக்கு பிணை வைத்தல்**

---

நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அமைச்சின் உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.